4th August 1955] [Sri P. G. Karuthiruman]

மின்சார வசதி இருந்தும், பம்பு செட்டுகள் மார்க்கட்டில் கிடைப்பது அரிதாக இருப்பதால், மின்சாரத்தை உபயோகப்படுத்தி, கிணற்றிலுள்ள தண்ணீரை வயல்களுக்குப் பாய்ச்சி பலன் அடைய முடிவதில்லை. ஆகையால் பம்பு செட்டுகள் மலிவான விலைகளுக்குக் கிடைக்கும்படி சர்க்கார் ஏற்பாடு செய்யவேண்டும். இவ்வளவு திட்டம் போட்டு வேலை செய்தும், ஏழை விவசாயிகள், நடுத்தர விவசாயிகள், இவர்களுக்கு பம்பு செட் வசதிகள் வாங்குவதற்கு பணமில்லாமல் தவிக்கிறார்கள். இவர்கள் அந்த பம்பு வசதிகளை வாங்க, கடன் வசதிகள் சீக்கிரம் கிடைக்கும்படியான ஏற்பாடுகள் செய்ய சம்பந்தப்பட்ட சர்க்கார் அதிகாரிகள் முன்வர வேண்டும். தவிர அந்த பம்பு செட்டுகளுக்கான, **Spare parts** சுலபத்தில் கிடைக்கும்படியான வசதிகள் செய்யவேண்டும். இவ்விதமாக கடன் வசதிகளும், மற்ற வசதிகளும் செய்து கொடுத்தால் எங்கள் பகுதியிலே பெருவாரியான விவசாயம் நல்ல முறையில் நடக்குமென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

" கவர்னர் பிரசங்கத்தில் கீழ் பவானி திட்டத்தைப்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். கீழ் பவானி அணை கட்டி முடிந்துவிட்டது. இரண்டு லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு அந்நீர் பாசனத்திட்டம் உபயோகமாக இருக்கிறதென்று சொல்லியிருக்கிறார்கள். முதல் ஐந்தாண்டு திட்டத்தின்கீழ், இந்த நீர்பாசன வசதி வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, தற்போது அதனால், ஏராளமான ஏழை, நடுத்தர விவசாய மக்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. இருந்தாலும், நடைமுறையில், வரி விகிதம் வசூல் செய்வதிலும், எந்தெந்த இடங்களில், அத்தண்ணீரை எப்படி எப்படி உபயோகப்படுத்த வேண்டுமென்பதிலும் சில தகராறுகள் இருக்கின்றன. கோபி தாலுக்காவில் 30 ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் வரி விதித்திருக்கிறார்கள். அதிலே ஐயாயிரம் ஏக்கருக்கு தண்டத் தீர்வையும் போட்டிருக்கிறார்கள். அதற்கு காரணம் என்னவென்றால், அங்கே இருக்கும் பொதுமக்கள் பிரதிநிதிகளில் சிலர், பொறுப்பற்ற முறையில் சில இடங்களில் போய், ஜனங்களைப் பார்த்து, நீங்கள் என்ன வேண்டுமென்றாலும் அந்த நீர்ப்பாசன தண்ணீரை செய்து கொள்ளலாம், இது சுதந்திர சர்க்கார், உங்களுக்கு எல்லா உரிமையும் இருக்கிறதென்று சொல்லி, மக்கள் உண்மை தெரிந்துகொள்ள முடியாத நிலைமையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள்."

DEPUTY SPEAKER :—" The House will now adjourn and meet again at 8-30 a.m. to-morrow."

The House then adjourned.

### IV.—PAPERS LAID ON THE TABLE OF THE HOUSE.

(1) *Amendments to Rules* 343 *and* 345 *of the Motor Vehicles Rules*, 1940, *under section* 70 *of the Motor Vehicles Act*, 1939, *regarding fitment of electrical direction indicator on motor vehicles, issued in G.O. No.* 1538, *Home, dated* 3*rd June* 1955. [*Laid on the table of the House with reference to sub-section* (3) *of section* 133 *of the Motor Vehicles Act.*]

(2) *Rule regarding using of Court-fee stamps purchased in Madras State alone made under sub-section* (1) *of section* 82 *of the Madras Court Fees and Suits Valuation Act*, 1955, *issued in G.O. Ms. No.* 1730, *Home, dated* 21*st June* 1955. [*Placed on the table of the House with reference to sub-section* (2) *of section* 82 *of the Act.*]

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS